## இன்போமேசன் கொமியூனிகேசன் டெக்னொலஜி ஏஜன்சி ஒப் சிறீ லங்கா (பிறைவேட்) லிமிடட் கம்பனி - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இன்போமேசன் கொமியூனிகேசன் டெக்னொலஜி ஏஜன்சி ஒப் சிறீ லங்கா (பிறைவேட்) லிமிடட் "கம்பனி" 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த இலாப நட்ட கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து தொகுதியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் மீது எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளினை முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்னிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பார்க்கையில் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | ஊரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 20 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினை சுழற்சி முறைமைக்கு இணங்க தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சலினை கணிப்பீடு செய்வதற்காக நிதியற்ற விடயங்கள் மாத்திரம் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 5,440,450 தொகையான பணிக்கொடை பெறுமதி நிதியற்ற செம்மையாக்கலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காசுப் பாய்ச்சலினை உறுதிப்படுத்துவதற்காக உள்ளபடியான பணிக்கொடை கொடுப்பனவு குறைத்தக் கொள்ளப்படும். ரூபா 5,440,450 என்ற 2022 நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவானது செயற்பாட்டு காசுப் பாய்ச்சலினை கணக்கீடு செய்யும் போது கழிக்கப்படுதல் வேண்டும். | நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சலினை கணிப்பீடு செய்வதற்காக நிதியற்ற விடயங்கள் மாத்திரம் செம்மையாக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 இன் பிரகாரம் 2022 திசெம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்ட எனினும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளை சான்றுபடுத்துவதற்கு முன்னர் இரத்துச் செய்யப்பட்ட 02 காசேலைகளின் பெறுமதியான ரூபா 226,848,738 சம்பந்தமாக செம்மையாக்கல் மேற்கொள்ளப்படாமை | திறைசேரியின் பணத்தை மீண்டும் வைப்புச் செய்யாது பணத்தை நிறுத்திவைப்பதற்கு அதே போல 2022 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கி மீதியினை பூச்சியத்திற்கு கொண்டு வருவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்திற்கு இணங்க இரத்துச் செய்யப்பட்ட காசேலைகளை சரியாக கணக்குகளில் செம்மையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக கம்பனியின் காசும் காசுக்குச் சமனானவைகளினதும் மீதி ரூபா 226,848,738 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் கிரயத்தை கணக்கீடு செய்யும் போது சொத்துக்கள் காணப்படுகின்ற நிலைமைக்கு மற்றும் இடத்திற்கு மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளையும் மூலதனமாக்க வேண்டிய போதிலும் அலுவலக கட்டிடத்தினை நவீனமயப்படுத்துவதற்காக ஆலோசனைக் கம்பனிக்குச் செலுத்தப்பட்ட ரூபா 3,302,500 தொகை சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு வீத்தினை கணிப்பீடு செய்யும் போது சொத்துக்களின் எதிர்பார்த்த ஆயுட்காலம் பௌதீக குறைவு, தொழில்நுட்ப ரீதியான மற்றும் வணிக ரீதியான வழக்கொழிதல் மற்றும் சட்டரீதியானதும் சமமானதுமான எல்லைகளை கருத்தில் கொள்ளவேண்டிய போதிலும் கட்டிடத்தினை நவீனமயப்படுத்தும் செயற்பாட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 66,725,736 தொகையான மின்சார ஸ்தாபித்தல்களும் பொருத்திகளும் (Electrical installation and fixtures) கட்டிடத்தின் எதிர்கால வாடகை கால எல்லை மற்றும் அந்த பொருத்திகளின் தன்மை தொடர்பாக கருத்தில் கொள்ளாது 05 ஆண்டுகளாக பெறுமானத் தேய்வு ஒதுக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. | இந்த ஆலோசனைக் கட்டணமானது 19 ஆம் மற்றும் 20 ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயமாக கருத்தில் கொள்ளாத செலவுகளின் கீழ் வருகின்றன. நடைமுறைரீதியாக சொத்துக்கள் அவற்றின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சொத்துக்கள் தொகுதியின் ஒவ்வொரு வகுதிக்காக பயன்தரும் ஆயுட்காலம்/ பெறுமானத் தேய்வு காலம் தீர்மானிக்கப்படும். ICTA இனால் சொத்துக்கள் பல்வேறு தொகுதிகளுக்கு வகைப்படுத்தப்படுவதுடன் மின்சார ஸ்தாபித்தல்கள் மற்றும் பொருத்திகள் என்ற தொகுதிக்குள் அமைகின்ற சொத்துக்களுக்காக ஐந்து ஆண்டுகள் எல்லைக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. கட்டிடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடக்கூடிய முதலீட்டினை கருத்தில் கொண்டு காணி உரிமையாளருடனான உடன்படிக்கையை நீடிப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவு அதிகாரம் உள்ளது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். | நியமத்திற்கு இணங்க நிலையான சொத்துக்களின் கிரயத்தை கணிப்பீடு செய்யும் போது சொத்துக்கள் காணப்படுகின்ற நிலைமைக்கு மற்றும் இடத்திற்கு மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் மூலதனமாக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை புலமைச் சொத்து அலுலுவலகத்தினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 32,363,150 தொகை 2019 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் ஏனைய வருமானக் கணக்கிற்கு செம்மையாக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக திரண்ட பற்றாக்குறை குறைவடைந்திருந்தது. இலங்கை தேசிய புலமை சொத்து அலுவலகத்தினால் மீண்டும் | இப்பணத்தை நேரடியாக NIPO இற்கு செலுத்துமாறு தொழில்நுட்ப அமைச்சினூடாக பொதுத்திறைசேரிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய செலவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணத்தை வழங்குமாறு 2022 ஆம் ஆண்டின் போது வேண்டப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் நிதி எற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கம்பனி Lanka Government Cloud 2.0 (LGC 2.0) ற்கான ரெட் ஹெட் ஓபன் ஸ்டெக் (Red Hat Open Stack) மென்பொருளின் ஒரு ஆண்டு உதவியளித்தல் மற்றும் பராமரிப்பிற்காக 2022 ஏப்ரல் 06 ஆந் திகதி வி. எஸ் இன்போமேஸன் (தனியார்) கம்பனியுடன் ரூபா 12,100,000 தொகையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2022 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,016,667 பணம் செலுத்த வேண்டிய செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 மே மாதத்திலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரையான காலத்தை உள்ளடக்கும் வகையில் முதலாவது ஆறு மாதத்திற்கான கொடுப்பனவுகளை செலவுகளாக பதிவுசெய்வோம். | செலுத்த வேண்டிய செலவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் வாகனங்களை நிறுத்துவதற்காக பெற்றுக்கொண்ட வளவிற்காகச் செலுத்த வேண்டிய மீளாய்வாண்டின் 07 மாதங்களுக்கான வாடகைக் கட்டணமான ரூபா 672,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 2023 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக வாகனங்களை நிறுத்தும் கட்டணங்களுக்குரிய இன்வொயிஸ் வழங்குனரினால் 2023 திசெம்பர் வரை சமர்ப்பித்தலினை தாமதித்தமை இந்த வாகனங்களை நிறுத்தும் கட்டணம் அட்டுறுவாக பதிவு செய்தலினை தவிர்த்ததிற்கு காரணமாக உள்ளது. | செலுத்த வேண்டிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டின் செலுத்தப்பட்ட ரூபா 166,933 தொகையான 2023 சனவரி மாத்திற்குரிய போக்குவரத்துச் செலவுகள் மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய ஒரு செலவாக கணக்கீடு செய்ததன் காரணமாக அப்பெறுமதியால் செலவுகளும் நடைமுறைப் பொறுப்புக்களும் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | தவறுதலின் விளைவாக இது இடம்பெற்றுள்ளது. | காலப்பகுதிக்குரிய செலவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 6,284,307 மற்றும் அத்திகதியிலுள்ளவாறு சம்பளத்தை தயாரிக்கும் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 6,284,307 கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக கம்பனியின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 யூன் மாதத்திலிருந்து அமுல்ப்படுத்தும் வகையில் உள்ளகரீதியாக சம்பள பதிவேட்டினை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் இப்பிரச்சினை இன்னும் உரியதல்ல. | நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

### 1.5.3 அமைப்பு தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 23,964,183 ஆக இருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 133,950,492 ஆகும். மேலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் உரிமை மூலதனம் ரூபா 133,950,472 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. எனவே இன்னும் அரசாங்க ஏற்பாடு கிடைப்பதன் அடிப்படையில் கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் தீர்மானமாகியிருந்தது. | ICTA என்பது அரசாங்கத்தினால் நிதி வழங்குகின்ற ஒரு அமைப்பாக இருப்பதனால் ICTA இன் நிலைபேறான செயற்பாடுகள் அரசாங்கத்தின் மானியத்தின் மீது தங்கியுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்வது அத்தியவசியமானதாகும். | ஆபத்தினைக் குறைத்துக் கொள்வதற்கு கம்பனி துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விறகான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு வரை அமைச்சிடமிரு கிடைக்க வேண்டியிருந்த பெறுமதியாக நிதிக்கூற்றிலும் பணிப்பாளர் சபை தீர்மானத்தி காட்டப்பட்ட ரூபா 14,809,774 தொகை 2019 ஆண்டின் போது செயற்திட்டத்தி அமுல்ப்படுத்தும் செலவாக கணக் செய்தமையின் காரணமாக 2022 ஆண்டிற்கான நிதி நிலைமையின் காட்டப்படுகின்ற திரண்ட நட்டம் அப்பெறுமதிய மிகைத்துக் காட்டப்பட்டிருந்தது. மே இப்பெறுமதியை உறுதிப்படுத்துவதற் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் செலவுக விபரத்தை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பத முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்தது. | இக்கொடுப்பனவுகள் அமைச்சினால் தீர்த்துவைக்கப்படாமையால் 2021 மே 20 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் செலவாக கணக்கீடு செய்யப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்களை சரியாக அடையாளங்கண்டு அதற்கிணங்க சரியாக கணக்குவைத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து மொத்தமாக ரூபா 2,775,096 தொகையான 68 கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்த்து வைக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 2,111,459 தொகையான 13 கடன்கொடுத்தோர் மீதிகளுக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு நேரடியாக கிடைக்க கூடிய வகையில் மீதிகளின் உறுதிப்படுத்தல்களைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,775,096 இன் மூலம் 2016 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாத 76 காசோலைகள் தொடர்பானதாகும். நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பதிலளிக்கப்படாத சந்தர்ப்பத்தின் போது மீண்டும் எழுதும் நடைமுறையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதியை துரிதமாக தீர்த்துவைத்தல் வேண்டும். மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு நேரடியாக கிடைக்ககூடிய வகையில் மீதிகளின் உறுதிப்படுத்தலினை கோருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய செலுத்த வேண்டியவைகளில் 2017 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அவசர கணனி பரிகார மன்றத்திற்கு (இலங்கை சேர்ட்) செலுத்த வேண்டிய ரூபா 40,215,928 தொகை தீர்த்துவைக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | CERT இற்கு செலுத்த வேண்டிய கணக்குகள் தவறுதலின் காரணமாக உருவாகியுள்ளது. தொழில்நுட்ப அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் கலந்துரையாடலின் பின்னர் இப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133 (1) ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு கலன்டர் ஆண்டிற்கும் ஒரு தடவை பங்குடமையாளர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும் கம்பனி 2017 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த பொதுக் கூட்டத்தினை நடாத்தியிருக்காததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான பொதுக் கூட்டம் 2023 நவம்பர் 07 ஆந் திகதி நடாத்தப்பட்டது. | நிதிக் கணக்ககளைத் தயாரிப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக வருடாந்த பொதுக் கூட்டத்தினை கூட்டுதல் தாமதமடைந்தது. 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்யும் வருடாந்த பொதுக் கூட்டம் 2023 நவம்பர் 07 ஆந் திகதி நடாத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுகள் முடிவடைந்ததன் பின்னர் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீளாய்விற்காக கோரப்படும். | கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை பங்குடமையாளர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிறுவக ரீதியான கடப்பாடுகள் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தி | ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தந்திரோபாய திட்டம், பாதீடு என்பன ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சினூடாக அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 இலிருந்து 2024 வரையான தந்திரோபாய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்திய தந்திரோபாய திட்டத்திற்கு 2023 யூலை 18 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த தந்திரோபாய திட்டத்திற்காக சபையின் | சுற்றறிக்கை ஒழங்கு விதிகளின் பிரகாரம் தந்திரோபாயத் திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு என்பன ஆண்டு ஆரம்பத்திற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சினூடாக அரசாங்க தொழில்முயற்சிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலும் கம்பனி மீளாய்வாண்டிற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டினை தயாரித்திருக்கவில்லை. | அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். சுற்றறிக்கையின் மூலம் உறுதியாகக் காட்டப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட நிதி அறிக்கையிடலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். | திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்பாட்டுக் கையேடு | | | |
| | (i) 3.2 ஆம் பந்தி | கம்பனிக்கு அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரித்த ஆளணியினர் எண்ணிக்கை காணப்படவில்லை. | ஆட்சேரப்பு முறைமை (SOR) அமுல்ப்படுத்தப்படாத போதிலும் 2020 நவம்பர் 04 ஆந் திகதி அமுலுக்குவரும் வகையில் அமைச்சரவை அங்கீரித்த ஆளணி காணப்பட்டது. 2023 திசெம்பர் 04 ஆந் திகதி தொழில்நுட்ப அமைச்சு (MOT) இன் ஊடாக அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் நிதி அமைச்சிற்கு (PED) சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரித்த SOR ஆட்சேரப்பு முறைமை காணப்பட்டது. | செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் கம்பனியின் ஆளணியினர் எண்ணிக்கை மற்றும் ஆட்சேரப்பு நடைமுறை தயாரித்து அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |
| | (ii) 3.5 ஆம் பந்தி | ஒழுங்குவிதிகளுக்கு இணங்க அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளின் (SOE) ஒரு ஊழியர் அமைச்சுக்கு அல்லது ஏனைய நிறுவனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாது விடுவிக்கப்படாதிருக்க வேண்டியதுடன் விடுவிக்கப்பட்ட காலப்பகுதியில் எந்தப் படியும் செலுத்தாதிருக்க | அமைச்சு செயலாளரினி வேண்டுகோளின் பிரகாரம் இரண்டு ஊழியர்களையும் தொழில்நுட்ப அமைச்சிற்கு விடுவிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சிகளின் (SOE) ஒரு உழியர் ஒரு அமைச்சிற்கு அல்லது ஒரு நிறுவனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாது விடுவிக்காதிருத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய போதிலும் கம்பனியின் இரண்டு உத்தியோகத்தர்கள் அங்கீகாரமின்றி தொழில்நுட்ப அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் தொலைபேசிப் படியாக ரூபா 2,560,000 செலவு செய்யப்பட்டிருந்தது. | | வேண்டும். செலுத்திய சம்பளம் மற்றும் படிகள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (iii) | 3.8 ஆம் பந்தி | அரசாங்க தொழில் முயற்சிகளின் ஒரு ஊழியருக்கான தொடர்பாடல் வசதிகள் காலத்திற்கு காலம் வழங்கப்படுகின்ற அரசாங்க சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனி சுற்றறிக்கை ஏற்பாடு இல்லாத செயற்திட்ட உத்தியோகத்தர்/ செயற்திட்ட உதவியாளர் மற்றும் சாரதி ஆளணியினரக்கும் தொலைபேசி படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 யூலை மாதத்திலிருந்து சம்பள ஏற்றம் கிடைக்காத, குறைத்து சம்பளம் கிடைக்கின்ற ஊழியர்களுக்கு இப்படி செலுத்தப்பட்டது. எதிர்காலத்தில் இந்த ஊழியருக்கு சம்பள ஏற்றம் வழங்கியதன் பின்னர் அந்த ஊழியரின் நடமாடும் தொலைபேசி படியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் அரசாங்க திட்டங்களின் ஊழியருக்கு தொடர்பாடல் வசதிகள் காலத்துக்கு காலம் வழங்கப்பட்ட அரசாங்க சுற்றிக்கையினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,629,927 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 41,648,126 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 21,018,199 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு தொடர்பாடல் செலவுகள் ரூபா 685,927,956 ஆல் அதாவது 58 சதவீதத்தால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் இரண்டு உத்தியோகத்தர்களை சேவையிலிருந்து நீக்கியமை சம்பந்தமாக கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தொடர்பான வழக்கு தீர்ப்பின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 18,870,000 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் இந்த வழக்கிற்காக கம்பனி மீளாய்வாண்டில் சட்ட கட்டணமாக ரூபா 1,070,000 செலவு செய்திருந்தது. | நீதிமன்ற திர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டி இருந்ததனால் கொடுப்பனவு செய்யப்பட்டது. சபையினால் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டது. | இவ்வாறான செலவு ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டியதுடன் ஆளணி நிருவாக நடவடிக்கையை முறைப்படியாக பேணுதல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 இன் 22 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சமூக பாதுகாப்பு வரியானது புரள்வு தொடர்பாக 2022 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்த வேண்டிய போதிலும் கம்பனி அரசாங்க தகவல் நிலையத்தின் முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்துதல் செயற்திட்டம் (Managment and Operation of Government Information Centre) தொடர்பாக சேவை வழங்குவதற்காக கம்பனிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஏப்ரல் மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதத்திற்குரிய இன்வொயிசுக்காக ரூபா 855,491 தொகையான சமூக பாதுகாப்பு வரி செலுத்தப்பட்டது. மேலும் இதன் காரணமாக அந்த இன்வொயிஸ்களுக்காக பெறுமதி சேர் வரி ரூபா 128,323 மிகையாகச் செலுத்தப்பமட்டிருந்தது. | இந்த இன்வொயிஸ் 2022 ஏப்ரல் மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரையான காலத்திற்குரியதாக இருந்த போதிலும் சேவை வழங்குகின்ற கம்பனியினால் 2022 திசெம்பர் மாதத்தின் போது உரிய அனைத்து இன்வொயிஸ்களும் வழங்கப்பட்டுள்ளது. தண்டப் பணத்தை தீர்மானிக்கும் தாமதமானது இந்த இன்வொயிஸ் அதிகரித்தல் தாமதமடைவதற்கு காரணமாகும். SSL 2022 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்படுவதனால் 2022 திசெம்பர் மாதத்தில் சேகரிக்கப்பட்ட இன்வொயிஸ்களுக்காக SSL இனை சேவை வழங்குகின்ற கம்பனிக்கு ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டது. | கம்பனிக்கு சாதகமற்ற நிலைமை ஏற்படக்கூடியதனை குறைத்தல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் ஆளணி சம்பளத்தை தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் செயற்பாடானது முறையான உடன்படிக்கையின்றி வெளி கம்பனியால் நிறைவேற்றப்பட்டதுடன் அதற்குரிய கட்டணங்களையும் உள்ளடக்கி சம்பளத்தை செலுத்துவதற்குரிய பணம் ரூபா 414 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. அக்கம்பனியால் மாதாந்தம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது சம்பளக் கொடுப்பனவு செயற்பாடு முடிவடைந்த உடன் அனுப்பிவைக்கப்படாது நாளாந்தம் ரூபா 5.80 மில்லியனிலிருந்து ரூபா 14.65 மில்லியன் வரையான தொகை 31 நாட்களிலிருந்து 53 நாட்கள் வரையான காலம் சம்பளம் தயாரிக்கும் கம்பனியால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | ICTA இற்காக சம்பளம் மற்றும் உரிய கொடுப்பனவுகளை தயாரித்து வந்திருந்த தனியார் கம்பனியின் சேவை 2023 மே மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் முடிவுறுத்தப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் இலத்திரனியல் சம்பளப் பத்திர முறைமையானது 2023 ஒக்தோபர் மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அமுல்ப்படுத்தப்பட்டன. | அரசாங்க நிதிகளை தனியார் தரப்பினரின் வங்கி கணக்குகளில் நிறுத்திவைக்கும் சந்தர்ப்பத்தை குறைத்து செயற்பாட்டை பூர்த்தி செய்த உடன் தனியார் தரப்பினர்களிடம் இருந்த மிகைப் பணத்தை உடனடியாக கம்பனிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (ஆ) | 2003 இன் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICTA) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் முழுமையாக பொதுத் திறைசேரிக்குச் சொந்தமான கம்பனியாக 2003 மே மாதம் 12 ஆந் திகதி இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் | விசேடமாக ICTA அரசாங்கத்திற்கச் சொந்தமான ஒரு தனியார் கம்பனி என கருதுகையில் CINTEC இன் தேறிய சொத்துக்கள் ICTA இற்குள் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனமாக உள்ளடக்குவதற்கு | அரசாங்கத்தின் ஏனைய ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைத்தலானது ஆரம்ப மூலதனத்தை ஈடுபடுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | தோற்றுவிக்கப்பட்டது. 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப சபைக்குரிய (சின்டெக்) அனைத்து அசையும் மற்றும் நிலையான ஆதனங்கள் மற்றும் சபையின் அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் கம்பனிக்கு (ICTA) ஒப்படைக்கப்பட்டிருந்தும் சபையின் அந்த தேறிய சொத:துக்கள் மீதியான ரூபா 5,744,115 கம்பனியின் உரிமை மூலதனத்திற்கு செம்மையாக்கப்படாது மிகைக்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. | சட்டரீதியான இயலுமை இல்லை. விபரிப்பதற்காக CINTEC இன் சொத்துக்கள் ICTA இன் கணக்கறிக்கைகளுக்கு ஒன்றிணைக்கப்பட்டுள்ளதுடன் CINTEC இன் நேரொத்த பொறுப்புக்கள் ICTA இன் கணக்கேடுகளில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேறிய சொத்துக்கள் (பொறுப்புக்கள் கழித்த சொத்துக்கள்) ICTA இன் ஒதுக்கங்களுக்கு முறையாக மாற்றப்பட்டுள்ளது. | என்பதனால் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | "ஈ-நூல் நிலையம்" செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக பில் என்ட் மெலின்டா கேட்ஸ் பவுன்டேஸன் வழங்கியிருந்த ரூபா 121,582,863 தொகை 2019 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் ஏனைய வருமானக் கணக்கிற்கு செம்மையாக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக திரண்ட பற்றாக்குறை குறைவடைந்திருந்தது. | Bill & Mellinda Gates Foundation இனால் இந்த நிதி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்காக பெற்ற பணம் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 235 ஆளணியினருக்குப் போதுமான ஒரு கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் உள்ளபடியான ஆளணியினர் 106 ஆக இருந்ததனால் 10320 சதுர அடிக்கான கட்டிட வாடகை ரூபா 21,054,840 விளைவற்று செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 16,048,194 பெறுமதியான அலுவலக மனைப் பொருட்களும் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. | ஆளணியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடவசதிகளுக்கு அப்பால் வளவினுள் பொது இடவசதி காணப்பட்டது. உதாரணமாக கூட்ட அறை, பகல் உணவு அறை, கேட்போர் கூடம், உணவுச்சாலை, கழிவறை, கொரிடோ முதலியவாறாக முழுச் சதுர அடி அளவானது ஆளணியினருருக்குத் தேவையான குடியிருப்பினை மிகைத்ததாகும். | சொத்தக்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் நிதியை ஈடுபடுத:துகின்ற பெறுகைகளை பெறுகை திட்டத்திற்குள் உள்ளடக்கி வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் | 2020 சனவரி 13 ஆந் திகதிய PS/GPA/ சுற்றறிக்கை/01/2020 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு 2020 திசெம்பர் 01 ஆந் திகதிய அமைச்சரவை | அனைத்து பெறுகைகளையும் வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கி அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் அலுவலக கட்டிடம் ரூபா 115,070,334 செலவு செய்து அலுவலக வளவாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தீர்மானம்/அங்கீகாரம் இலக்கம் AMP/20/1784/301/012 மற்றும் ICTA பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளளிப்புச் செய்த பெறுகை நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் ICTA பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினை கவனித்துப் பார்த்து பெறுகை பிரிவு ஊகித்துக் கொண்டதானது மேற்கூறிய சுற்றறிக்கைக்கு வழங்கியுள்ள முன்னுரிமை வேலை ஒப்படைப்புக்களை கவனித்து பார்த்து மீளளிப்புச் செய்யப்பட்ட பெறுகை நடைமுறையினை முன்கொண்டு வருவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரம் தற்பொழுது காணப்படுகின்றது என்பதாகும். | வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் போக்குவரத்து அணிக்காக வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு தனியார் கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் காலம் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதியில் முடிவடைந்திருந்தும் அந்த உடன்படிக்கை காலத்தினை நீடித்தல் அல்லது 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாது 2022 ஆம் ஆண்டின் போது இன்னும் 5 வாகனங்கள் வர்டகை அடிப்படையில் பெற்று ரூபா 6,090,084 செலவு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் 2023 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து முறையாக அங்கீகரித்த நடைமுறை பின்பற்றப்படுகின்றது என்பதனை சான்றுபடுத்துவதற்கு நிருவாகத் திணைக்களம் தற்பொழுது நடவடிக்கை எடுத்துள்ளது. | அனைத்து பெறுகைகளும் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 (அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகைச் செயற்பாடு தொடர்பாக காலவரிசைப் படியான படிகளை விபரிக்கின்ற பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 9,578,856 தொகையான 03 பெறுகைகள் சம்பந்தமாக வழிகாட்டிக் கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த அவதானிப்பை சரிசெய்வதற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பெறுகைகளுக்காவும் கால அட்டவணை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாதும் உடன்படிக்கை செய்து கொள்ளாதும் வாகனங்களை நிறுத்துவதற்காக தனியார் தரப்பினரிடமிருந்து ரூபா 96,000 மாதாந்த வாடகைக்கு ஒரு காணியை பெற்று மீளாய்வாண்டில் ரூபா 1,152,000 செலவு செய்யப்பட்டிருந்தது. | 2024 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து இந்த வாகனத்தை நிறுத்தும் வசதிகள் கைவிடப்பட்டன. | பெறுகை வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 01 ஆந் திகதிய அமைப/20/.1784/301/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்யாது திறைசேரியின் அல்லது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது ஒப்பந்த சேவைக் காலத்தினை கம்பனியின் சேவைக் காலமாக கணிக்கப்பட்டது எனக் காட்டி 69 ஒப்பந்த ஆளணியினருர்களுக்கு 2021 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2003 யூன் 03 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது நிரந்தர ஆளணியினருக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள தரத்தின் ஆரம்ப படி நிலையில் வைத்திருக்காது பெற்றுவருகின்ற ஒப்பந்த சம்பளத்தினை விட 0 சதவீத்திலிருந்து 87 சதவீதம் வரையான அதிக சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தி புதிய சம்பள கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.<br><br>மேலும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிறக்கையின் 3.2 (iv) ஆம் பந்தியின் பிரகாரம் சம்பள அதிகரிப்பினை வேண்டி திறைசேரி செயலாளர் தலைவராக இருக்கின்ற குழுவிற்கு அனுப்பிவைக்கப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு உத்தியோகத்தருக்குமான உத்தேச சம்பள ஏற்றத்திற்காக பணிப்பாளர் சபையின் | அமைச்சரவை அங்கீகரித்த ICTA இன் நியதிச்சட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக ஆட்சேர்ப்புச் செய்யும் தேவைப்பாடு காணப்பட்டது.<br><br>சம்பள ஏற்றத்தினை வழங்கும் போது முறையாக அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்படவில்லை என்ற அவதானிப்புடன் இணங்குகிறேன். | அமைச்சரவை தீர்மானம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தி புதிய சம்பள கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |

அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது 2022 யூலை 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் ஆளணியினருக்கு சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளின் வரைபு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி 294 நாட்களுக்குப் பின்னர் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்தது. | முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை பூரணப்படுத்தியதன் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தாமதமடைந்துள்ளது. | செயற்பாட்டு கையேட்டின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நிதி ஆண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் ஆண்டறிக்கையும் கணக்குகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். |